ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/12 - 2022 දෙසැම්බර් මස 13 වැනි අඟහරුවාදා - 2022.12.13

*2310/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978*(x)(ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கறன்டி) லிமிட்டெட் (SLIIT) தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, பதிவிலக்கம் ஜிஎல் 24 ஐக் கொண்டதும், பட்டம் அளிக்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டதுமான, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான II ஆம் அட்டவணையில் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டு பட்டத்தை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜியின் (கறன்டி) 5 ஆம் மாடி, இல. 24, ஈ. எச். கூறே கோபுரம், அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை (மாத்தறை கிளை) என்னுமிடத்தில் அமைந்துள்ள கிளையை இக்கட்டளை மூலம் ஏற்றங்கீகரிக்கின்றேன். இதன்கண் உயர்கல்வியை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக, அதன் சுருக்கீடு இதற்கான II ஆம் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை** I

நிபந்தனைகள்

1. ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கறன்டி) லிமிட்டெட் (SLIIT) - மாத்தறை கிளை ஆனது இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு பாட மீள் மீளாய்வு தொடர்பில், ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கறன்டி) லிமிட்டெட் (SLIIT) - மாத்தறை கிளை ஆனது இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டமளிப்பின் முதல் இரண்டு வருடங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

1A - PG 6094 — 286 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கறன்டி) லிமிட்டெட் (SLIIT) - மாத்தறை கிளை ஆனது இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டமளிப்புக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகள், 5 ஆம் மாடி, இல. 24, ஈ. எச். கூறே கோபுரம், அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை இல் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.

3. ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (கறன்டி) லிமிட்டெட் (SLIIT) - மாத்தறை கிளை ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டமளிப்புக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கான மாணவர்களைச் சேர்க்கும்போது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளை பின்பற்றியொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| **நிரல் I**<br>*பட்டம்* | **நிரல் II**<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம் | பிஎஸ்சி கௌரவ (தகவல் தொழில்நுட்பம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, திசெம்பர் 08.

EOG 12-0140